# THE IMPACTS OF POVERTY ON SECONDARY STUDENTS' EDUCATION- A CASE STUDY OF T/KINNIYA AL-AQSA NATIONAL SCHOOL

## இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்கள்: தி.'. கிண்ணியா- அல் அக்ஸா தேசிய பாடசாலையின் நிலை பற்றிய ஆய்வு

**M.M.M. Rasmy and M.M. Shiyana**

Department of Islamic Studies,
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka.

rasmymubarak19990715@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :** *கல்வி என்பது ஒரு தனிமனிதனில் ஆரம்பித்து சமூகத்தின் பால் அதன் வெளியீட்டினைக் கொண்டு சேர்க்கும் ஒரு கருவியாகும். கல்வியின் முக்கியத்துவம் அதிகம் பேசப்பட்டு வந்தாலும் அதனை பெற்றுக் கொள்வதில் பல காரணிகள் தடையாகவுள்ளன. அதனடிப்படையில் கிண்ணியா கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலையான தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்களை அடையாளப்படுத்துவதனை இவ்வாய்வு முதன்மை நோக்காகக் கொண்டுள்ளது. பண்பு மற்றும் அளவுசார் முறையில் அமைந்த இவ்வாய்வானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டமைந்துள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் அளவையியல் வினாக்கொத்து என்பவற்றை உள்ளடக்கி அவை விபரிப்பு மற்றும் விளக்கப் பகுப்பாய்வு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வின் பெறுபேறுகளை விளக்க விரிதாள் துணை (MS Excel Sheet 2013) கொண்டு தரவுகள் பகுப்பாயப்பட்டு அட்டவணைகளும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வுக் கட்டுரைகள்இ அறிக்கைகள், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் ஆகியன மிளாயப்பட்டு ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பைப் பெற்றுள்ளது. ஆய்வின் பிரதான கண்டறிதல்களாக: மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர் கவனம் செலுத்தாமை, தினசரி பாடசாலைக்கு செல்வதில் மாணவர்கள் மத்தியில் விருப்பமின்மை, மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் சிக்கல்கள், மாணவர்கள் தொழிலுக்குச் செல்லுதலில் ஆர்வம் காட்டல், வளப் பற்றாக்குறை, பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதில் சிக்கல்கள், பாடசாலை வருகை குறைவும் பாடசாலை இடைவிலகல்களும், கல்வியில் பின்னடைவு போன்ற பிரச்சினைகளை கண்டுகொள்ள முடிகின்றது. எனவே மாணவர்களின் கல்வியில் வறுமையானது எதிர்மறையான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதை இவ்வாய்வு முடிவாகக் கொள்கிறது. குறித்த பாடசாலையில் கல்வி பெறும் மாணவர்களின் பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி அவர்களுக்கு உதவித் திட்டங்களை மேற்கொள்ளவும் மாணவர்களுக்கு உண்டாகும் கல்வி சார்ந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பற்றிய முன்மொழிவை தருவதாகவும் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வு செய்பவர்களுக்கு இவ்வாய்வு துணைபுரிவதாகவும் அமையும்.*

**திறவுச்சொற்கள்:** பாடசாலை, வறுமை, மாணவர்கள், பெற்றோர்கள், வறுமையின் தாக்கங்கள்

## 1. அறிமுகம்

21ம் நூற்றாண்டில் வாழும் நாம் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கக் கூடியவர்களாக உள்ளோம். உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல துறைகள் காணப்படுகின்றன. அவைகளில் மிக முக்கியமான துறையாக இந்தக் கல்வித்துறை காணப்படுகிறது. இதனாலேயே கல்வியின் அவசியம் அதன் தேவை அனைவராலும் உணரப்படுகின்றது (மகேஸ்வரன், 2019). கல்வி என்பது ஒருவரின் நடத்தையில் ஏற்படுத்தும் மாற்றத்தைக் குறித்து நிற்கின்றது (சந்திர சேகரன், 1992). கல்வியானது அதன் முக்கியத்துவத்தை சாதாரண வீட்டு மட்டம் முதல் சர்வதேசம் வரை அதனது தாக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் பல்வேறு வகையாக கல்வி முறைகள் காணப்படுகின்றன. அதில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக்

கல்வி, பல்கலைக்கழகக் கல்வி உள்ளடங்கிய உயர் கல்வி, தொழிநுட்பக் கல்வி, வாழ்க்கை நிடித்த கல்வி, தொடர் கல்வி என்பன அடங்கும் (இசுருபாய, 2020). இவ்வாறாக கல்வி முறைமைகள் காணப்பட்டாலும் கல்வியை முழுமையாக தொடர்வதற்கு வறுமையானது மாணவர்களுக்கு தடையாக அமையக்கூடியதாக இருக்கின்றது (மகேஸ்வரன், 2019). வறுமைக்கு பல்வேறு வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்ற போதிலும் வறுமை என்பது மகிழ்ச்சியில் குறைவை ஏற்படத்தக்கூடியதம் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத ஒன்றாகும் (அஹமட் லெப்பைஇ 2013).
அந்தவகையில் உலகிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 22 சதவீதமானோர் வறுமையில் வாடுவதாக புள்ளிவிபரங்கள் மற்றும் கணக்கெடுப்புக்கள் கூறுகின்றன. இன்னும் 10.7மூ மக்கள் தீவிர வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தெற்காசிய நாடுகளில் 44 சதவீதத்திற்கும் அதிகமானோர் இதில் உள்ளடங்குகின்றனர் என உலக வங்கியின் அறிக்கை கூறுகின்றது (உலக வங்கி அறிக்கை, 2020). அதனடிப்படையில் இலங்கையில் தற்கால வறுமை நிலையானது 4.1 சதவீதமாக அதாவது 843,913 மக்கள் வறுமையில் உள்ளனர். இலங்கையை அடிப்படையாக வைத்து மேற்கொண்ட தேவை மதிப்பீட்டின் போது நாட்டின் 25 மாவட்டங்களில் 11 மாவட்டங்களில் உள்ள 2900 குடும்பங்கள் தற்கால பொருளாதார நெருக்கடியால் ஏதோ ஒருவகையில் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது (செஞ்சிலுவைக் குழு அறிக்கை, 2022). இலங்கையில் 4.8 மில்லியன் மாணவர்களின் கல்வி நிலையானது வீட்டுச் சூழல் வறுமையால் ஆபத்தில் இருப்பதாக யுனிசே/ப் அறிக்கை கூறுகின்றது (ஜொர்ஜ் லறியா- அட்ஜெலின், 2022). எனவே தான் வறுமையானது மாணவர்களது கல்வி நிலையில் பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றமையை காணக் கிடைக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் சுமார் 1.7 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். அதில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்களைப் பொறுத்த வரை 100 குடும்பங்களில் 21 குடும்பங்கள் காணப்படுகின்றது. இன்னும் திருகோணமலையில் 100 குடும்பங்களில் 10 குடும்பங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற குடும்பங்களாகும் (மக்கள் தொகை விபரம்இ 2019). ஆய்வுப் பிரதேசமான கிண்ணியாவானது திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட ஓர் பிரதேசமாகும். ஆய்வுப் பரப்பிலுள்ள பாடசாலையான தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையானது மொத்தமாக 902 ஆண் மாணவர்களை கொண்டு காணப்படுகின்றது. அதில் இடைநிலைப் பகுதியான 6-11 பிரிவில் மொத்தமாக 742 ஆண் மாணவர்களாகும். இவர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் வறுமை நிலையில் இருப்பதை காணமுடிகின்றது (பாடசாலை அறிக்கை, 2022). இப்படியாக இருக்கக்கூடிய வறுமை நிலையானது இடைநிலைப் பிரிவு மாணவர்களது கல்வியில் அதிக தாக்கத்தையும் சவால்களையும் ஏற்படுத்துகின்றது (மகேஸ்வரன், 2019).

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா கல்வி வலயத்தில் அமைந்துள்ள பாடசாலையான தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இடை நிலைப் பிரிவில் (6-11) கல்வி கற்கும் ஆண் மாணவர்கள் கல்விசார்ந்த விடயங்களில் வறுமையின் செல்வாக்கு காணப்படுவது அண்மைக்காலமாக அறிய முடிகின்றது. இதுவே இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது. கிண்ணியாவைப் பொருத்தமட்டில் அரச ஊழியர்கள், சிறு வணிகர்கள், சில்லறை கடை வியாபாரிகள், கடலுக்கு செல்பவர்கள், விவசாயம் செய்பவர்கள், வாகன ஓட்டுனர்கள், கூலித்தொழில் செய்பவர்கள் என வெவ்வேறு வகைகளில் அவர்களது ஜீவனோபாயம் அமைகின்றது. வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் சராசரி குடும்ப எண்ணிக்கை 06 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கின்றது. இவ்வாறான குடும்பப் பின்னணியைக் கொண்ட மாணவர்கள் வறுமையால் கல்விப் பிரச்சினைகளை அதிகம் முகம்கொடுப்பதை அறியமுடிகிறது. எனவே இடைநிலைப் பிரிவு மாணவர்கள் கல்விப் பிரச்சினைகளில் வறுமையின் தாக்கத்தை அறிவது முக்கியமானது.

ஆய்வு பிரதேசத்தினது பொருளாதார நிலையை பொறுத்தளவில் வறுமை எனும் காரணி மக்களின் வாழ்வியலுடன் ஒன்றிணைந்த விடயமாக காணப்படுகிறது. எமது நாட்டில் சீருடை, பாடப் புத்தகம், மதிய உணவு (இலங்கை கல்வித் துறை,1980) என்பன இலவசமாக வழங்கப்பட்டாலும் பொருட்களின் விலையேற்றம் மக்கள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக வறுமையால் வாடுகின்ற மக்கள் தமது பிள்ளைகளுக்கு கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இலங்கையின் வறுமை வீதம் 11.7% என கடந்த ஜுன் மாதம் கணிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி நாட்டில் சுமார் 23 லட்சம் மக்கள் வறுமைக் குடும்பப் பின்னணியின் கீழ் உள்ளனர். வருமானத்தை விடவும் செலவுகள் அதிகரித்துள்ளமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது (BBC அறிக்கை, 2022).

## 2. ஆய்வின் நோக்கங்கள்

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாக கொண்டது.

1. தி/கிண்- அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்களை அடையாளம் காணல்.
2. கல்வியில் வறுமை ஏற்படுத்தும் பிரச்சினைகளை முறையாகக் கையாள்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

## 3. ஆய்வு முறையியல்

பண்பு மற்றும் அளவுசார் முறையில் அமைந்த இவ்வாய்வானது இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமையின் தாக்கத்தை மதிப்பிடுகிறது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்ட இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவுகளாக அளவையியல் வினாக்கொத்து, நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மூலமான தரவுகள் அனைத்தையும் விபரிப்பு மற்றும் விளக்கப் பகுப்பாய்வு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளாக தலைப்புடன் தொடர்புபட்ட ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளத் தகவல்கள் ஆகியன மிளாயப்பட்டு இலக்கியத்தரவுப் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் அனைத்தும் இவ்வாய்வுக்கான ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பைப் பெற உதவியன. கிண்ணியா கல்வி வலயத்தில் காணப்படும் 66 பாடசாலைகளில் ஒரு பாடசாலையான தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையில் காணப்படும் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்களை அப்பாடசாலை அதிபர், மாணவர் வழிகாட்டல் ஆசிரியர், வகுப்பாசிரியர்கள்இ மாணவர்களது பெற்றோர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச செயலக துணைத் திட்டமிடல் அதிகாரி ஆகியோரிடம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பாடசாலையில் இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் 740 மாணவர்களில் 40 மாணவர்களை தெரிவு செய்து தரவுகள் பெறப்பட்டன. குறிக்கோள் மாதிரி அடிப்படையிலும் அளவையியல் வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட தரவுகளின் படியும் குடும்பங்களின் வருமான விபரம் மற்றும் வறுமைக் குடும்பப் பின்புலத்தினை அடிப்படையாகக் கொண்டும் இம்மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் இவர்களை தெரிவு செய்தமைக்கான காரணம் இவர்கள் கல்விசார் பிரச்சினைகளை அதிகம் முகம்கொடுப்பதை அறியமுடிகிறது. ஆய்வின் பெறுபேறுகளை விளக்க விரிதாள் துணை கொண்டு தரவுகள் பகுப்பாயப்பட்டு (MS Excel Sheet 2013) அட்டவணைகளும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளது.

## 4. இலக்கிய மீளாய்வு

கடந்த காலங்களில் இத்தலைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கங்களை ஆய்வுக்கு உட்படுத்திய போது வறமையின் காரணமாக இடைநிலைப் பிரிவு மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகள் அதிகம் இடம் பெற்றிருப்பதை அறிய முடிந்தது.

‘‘வறுமையும் சமூகத் தாக்கங்களும் தொடர்பான ஓர் பகுப்பாய்வு’’ எனும் தலைப்பில் S.M.அஹம்மட் லெப்பை மற்றும் M.F.பாஸிலா என்போர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது வறுமைப் பற்றிய மக்களிடம் காணப்படக்கூடிய பல்வேறுபட்ட புரிதல்கள் சம்பந்தமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது வறுமையானது மக்களின் உள்ளங்களிலும் உணர்வுகளிலும் மாற்றத்தை கொண்டு வரக்கூடியதாகவும், உலகளாவிய ரீதியில் பேசப்பட்டு வரும் ஓர் பாரியப் பிரச்சினையாக திகழ்வதுடன் சிறுவர்களின் கல்வியில் மாத்திரமில்லாமல் அவர்களது சுகாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. வறுமையால் இடம்பெறக்கூடிய பிரச்சினைகளில் மிக முக்கிய பிரச்சினையாக தாய்-தந்தையர்கள் வெளிநாடு செல்வதுதான் காரணம் என்பதும் இவ்வாய்வின் கண்டறிதல்களாகும்.

‘‘வாழ்வாதாரம் சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வறுமையை படமாக்களும் மதிப்பிடலும்’’ (Mapping and evaluation of Poverty Based on Livelihood Assets:) எனும் தலைப்பில் சுபதாரணி கேதிஸ்வரநாதன் மற்றும் சுபாஜினி உதயராசா போன்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது வறுமை நிலையினால் மக்கள் சமூக, பொருளாதார, இயற்கை மற்றும் மனித மூலதனம் பின்னடைவானது வறுமைக்கு காரணங்களாக அமைந்துள்ளன என்பதை குறித்து காட்டி இருக்கின்றார்கள். மேலும் அவர்கள் மேற்கொண்ட

ஆய்வுப் பிரதேசத்தில் உயர்வான வறுமை கொண்ட பகுதிகளாக எதனையும் அடையாளம் காணப்படவில்லை என்பது இவர்களது கண்டறிதலாக காணப்படுகின்றது.

“பாட வீட்டுப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் வறுமையான வீட்டுச் சூழலின் தாக்கம்” எனும் தலைப்பில் யு.ர்.றிபாஸ், M.I.M.ஜெஸில் மற்றும் M.M.சித்தி பாத்திமா என்போர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மாணவனுடைய கல்விச் செயற்பாடுகளுக்கு வறுமை தடையாக உள்ளதை பிரதிபலிக்கிறது. இம்மாணவர்களது வறுமைக்கு அடிப்படையாக அமையும் காரணிகளாக: வறுமையான வீட்டுச் சூழலில் கற்கும் அறை, கணினி உபகரணங்கள், நூல்கள், தளபாடங்கள், மின்சார வசதிகள், பெற்றோரின் ஒத்துழைப்பு போன்றன போதியளவில் கிடைக்காமை என்று கூறுகின்றார்கள். இதன் மூலம் பாடசாலை மாணவர்கள் தமது வீட்டுப் பணிகளை வினைத்திறனாகவும் வெற்றிகரமாகவும் செய்வது கடினமானது என்பது ஆய்வின் கண்டறிதல்களாகும்.
ஆகவே இந்த ஆய்வுகள் அனைத்தும் இலங்கைச் சூழலை மையப்படுத்தி உள்ளதுடன் மாணவர்களது குடும்பச் சூழல் போன்றவற்றையும் பகுப்பாய்கின்றன. ஏனினும் தற்போதைய ஆய்வானது மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளில் வறுமையின் செல்வாக்கை மதிப்பிடவும் அவர்களது கல்வியில் வறுமையின் தாக்கத்தை இணங்காணவும் விளைகிறது. இன்னும் வறுமையினால் உண்டாகும் எதிர்மறைக் காரணிகளை வெளிக்கொண்டு ஆராய்வதால் இந்த ஆய்வுகள் அனைத்தும் முக்கியம் பெறுகின்றது.

## 5. கலந்துரையாடல்களும் கண்டுபிடிப்புக்களும்

### 5.1. மாணவர்களின் குடும்பப் பின்னணி


இலங்கையில் தொழிலாளர்களாகவுள்ள 63,414 பிள்ளைகளில் பெரும்பாலானோர் கிராமப்புறங்களைச் சேர்ந்த 15 தொடக்கம் 17 வயதுக்கு உட்பட்ட பாடசாலைக் கல்வியை இடைநடுவில் நிறுத்தியவர்களாகக் காணப்படுகின்றனர் (இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் அறிக்கை, 2022). ஒரு குடும்பத்தில் 5க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் அவர்களது அன்றாட செலவுகள் சிக்கலானதாக காணப்படுகின்றது. அதிலும் தந்தையானவர் கூலித் தொழிலாளியாக இருந்தால் அது கேள்விக்குறியாகத் தான் இருக்கும் (நேர்காணல் : 01). எனவே ஆய்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேச மக்களின் வருமானம் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கையை பின்வரும் அட்டவனை 01 யின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

**அட்டவனை : 01**

| மாதாந்த வருமானம் (ரூபா) | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| Below 5,000 | 6223 |
| 5,001-9999 | 7203 |
| 10,000-19,999 | 3781 |
| 20,000-39,999 | 2247 |
| 40,000-49,999 | 1736 |
| 50,000-69,999 | 1516 |
| 70,000-99,999 | 1261 |
| 100,000 and above | 954 |

*மூலம்: கிண்ணியா பிரதேச செயலகம் - 2022*


மேற்படி தரவிற்கிணங்க 6223 குடும்பங்கள் தீவிர வறுமைப் பின்னணிக் குடும்பங்களாகவும், 7203 குடும்பங்கள் சாதாரண வறுமைப் பின்னணிக் குடும்பங்களாகவும் வாழ்கின்றனர். குடித்தொகையில் 13426 குடும்பத்தினர் வறுமைப் பின்னணிக் குடும்பங்களாக இருப்பதாக பிரதேச சபை அறிக்கை கூறுகின்றது (கிண்ணியா பிரதேச செயலக அறிக்கை, 2022). கல்விக்கான செலவு அதிகரித்தமையால் மாணவர்களுக்கு பெற்றோர்கள் மூலம் தொடர்ந்து கல்வியை வழங்க முடியாத நிலையில் அவர்களை தொழிலுக்கு அமர்த்தும் நிலைமையும் ஏற்படுகிறது. (மகேஸ்வரன் பிரசாத், 2019). இதனால் தமது பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி வேலைக்கு அமர்த்துகின்றனர். கிண்ணியாவில் காணப்படும் வறுமையின் குடும்பப் பின்புலங்களாக பின்வரும் வரைபடம்- 01 நமக்கு காட்டுகின்றது.




வரைபடம்- 01: குடும்பப் பின்புலம்
*மூலம்: நேர்காணல் அறிக்கை 2022.*

வீட்டு வருமானம் குறைவு என்பது அதிகமான மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. மிகக் குறைவானவர்கள் கணவன்மார்களின் இறப்புக்கள் மூலம் சந்தர்ப்ப வறுமையைச் சந்திப்பதாக மேலே உள்ள வரைபடம் குறித்துக்காட்டுகின்றது. மாணவர்கள் இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்ளாவதற்கு காரணம் அவர்களது பெற்றோர்களது வறுமை குடும்பப் பின்புலமாக அமைகின்றது. இப்பகுதியில் வாழும் மக்களில் அதிகமானவர்கள் அன்றாடம் கூலித்தொழில் மேற்கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர். மாதிரிக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பின் காரணமாகத்தான் தற்காலத்தில் கற்றல் செயல்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்வதிலும் பாடசாலைக்கு சமூகம் அளிப்பதிலும் பல சவால்களை எதிர்நோக்குவதாக பெரும்பாலான மாணவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

2022ம் ஆண்டு ஒக்டோபர் மாத அறிக்கையின் படி: இலங்கையின் வறுமைக்கோட்டு நிலைமை 13,810 ரூபாவாக காணப்படுகிறது. ஒருவர் தனது குறைந்தபட்ச உணவுத்தேவையையும் அடிப்படைத் தேவையையும் பூர்த்தி செய்வதற்கே அந்த நிதி தேவைப்படுகின்றது. இருப்பினும் 04 உறுப்பினர்களை கொண்ட ஒரு குடும்பம் 55,240 ரூபாவை மாதாந்த வருமானமாகப் பெறாவிடின் அந்த குடும்பம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பமாக அடையாளப்படுத்தப்படுகிறது (இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், 2022). இவ்வாறான புள்ளிவிபரவியல் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தை ஒப்பிட்டு நோக்கினால் பல குடும்பங்கள் வறுமை நிலையில் காணப்படுவதை உறுதிப்படுத்தலாம். தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையின் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களது பின்னணியை ஆய்வுக்கு உட்படுத்தியபோத ஆய்வில் கலந்து கொண்ட 40 மாணவர்களில் பெரும்பாலானோர் (71%) வறுமைப் பின்னணியைக் கொண்டிருந்தமையும் (29%) ஏனைய பிரச்சினைகளின் பின்னணியை கொண்டு காணப்படுவதை பின்வரும் வரைபடம்- 02ன் மூலம் அறிய முடிகின்றது.




வரைபடம்: 02 *மூலம் : கள ஆய்வு 2022*

அவர்களில் வறுமைப்பின்னணியைக் கொண்ட பெற்றோர்களை நேர்காணல் செய்த போது: ஒரு தந்தையின் பதில் பின்வருமாறு அமைந்துள்ளது: நான் றஹ்மானியா, கறையோர வீதியில் வசிக்கின்றேன். எனது தொழில் கடலுக்கு செல்வது. நாங்கள் மொத்தம் 05 குடும்ப உறுப்பினர்களை கொண்டுள்ளோம். எனது இரு பிள்ளைகள் பாடசாலை செல்லக்கூடியவர்கள். எங்களது அன்றாட தேவையை நிறைவேற்றுவதில் பாரிய சவால்கள் காணப்படுகிறது. ஆகையால் மேலதிக நேரம் வேலைக்கு செல்பவனாக இருக்கின்றேன் (நேர்காணல்-02).

நான் றஹ்மானியா, கறையோர விதியில் வசிக்கின்றேன். எனது தொழில் றொட்டி தயாரிப்பது. எனது மனைவி உடல் நிலையிலும், மன நிலையிலும் குறைபாடுடையவராக காணப்படுகின்றார். நாங்கள் மொத்தம் 06 குடும்ப உறுப்பினர்களை கொண்டுள்ளோம். எனது இரு பிள்ளைகள் பாடசாலை செல்லக்கூடியவர்களாகவும் 01 பிள்ளை ஆரம்ப பாடசாலைக்கு செல்கின்றது. எங்களது அன்றாட தேவையை நிறைவேற்றுவதில் பாரிய சவால்கள் காணப்படுகிறது. ஆகையால் பகல் வேலைகளில் கடைக்கும் இரவு வேலையில் கடலுக்கும் செல்பவனாக இருக்கின்றேன் (நேர்காணல்-03). இவ்வாறு பெற்றோர்களது வருமானம் போதாமையால் மாணவர்களும் தொழில் துறைக்குத் தள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

### 5.2. மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்கள்

#### 5.2.1. வளப் பற்றாக்குறை, பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதில் சிக்கல்

ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களில் 24 மாணவர்கள் (60%) ஆனவர்கள் தாங்கள் பாடசாலையில் உபயோகிக்கும் பொருட்களை கொள்வனவு செய்வதில் சிக்கல் நிலை மற்றும் சவால்களை அனுபவிப்பதாக குறிப்பிடுகின்றனர். அதாவது இவர்களுடைய குடும்பத்தில் இம்மாணவர்களைத் தவிர்த்து சராசரியாக இருவர் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதை காணமுடிகின்றது. இதனால் அக்குடும்பத்தின் வளப் பற்றாக்குறையானது பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதனடிப்படையில் அவர்கள் மூவருடைய பாடசாலை உபகரணங்கள் விடயத்தில் பெற்றோர்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாவதை அறிய முடிகிறது. இன்னும் பாடசாலை உபகரணங்களுக்கான தற்போதைய விலை நிர்ணயமும் இதற்கு ஓர் காரணியாக இருப்பதையும் கண்டுகொள்ள முடிகின்றது. இங்குள்ள 24 மாணவர்கள் அரச வறுமை ஒழிப்பு நிதியான சமூர்த்திக் கொடுப்பனவுப் பணம் பெறக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். 05 மாணவர்கள் ஏனைய அரச சார்பற்ற நிவனங்களில் உதவித்தொகை பெறபவராகவும் ஏனைய 11 மாணவர்கள் எவ்வித உதவித் தொகைகளையும் பெறாதவர்களாக இருக்கின்றனர் (சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 2022).

#### 5.2.2. பாடசாலை வருகை குறைவு

மாணவர்களது பாடசாலை வருகை வீதமானது இடைநிலைப் பிரிவு மட்டத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. பாடசாலைக்கு வருகை தருவதைத் தவிர்த்து இதர செயற்பாடுகளுக்கு மாணவர்கள் முன்னுரிமை அளிக்கின்றனர். இதற்கான காரணமாக: இடை நிலைப்பிரிவு மாணவர்களின் பெரும்பான்மையானவர்களின் பெற்றோர்கள் வறுமைப் பின்னணியைக் கொண்டிருக்கின்றமை, தாய்-தந்தைகளை இழந்தவர்கள் (36%), தாய் வெளிநாட்டில் இருத்தல், பாடசாலைக்குத் தவறாமல் செல்வதற்கான ஒத்துழைப்பு பெற்றோரினால் ஒழுங்காக வழங்கப்படாமை, மாணவர்களக்கு கற்றலில் பலவீனம், ஊக்கமின்மை, போக்குவரத்து வசதியின்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இப்படியான காரணிகளிள் ஊடாக மாணவர்களது பாடசாலை வருகை குறைவாக உள்ளமையை அறியமுடிகின்றது (நேர்காணல்-04).

#### 5.2.3. பாடசாலைக்கு செல்வதில் ஆர்வமின்மை

ஆய்வுப்பரப்பில் ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களில் பெரும்பாலனவர்களின் பாடசாலைக்கு செல்வதில் ஆர்வமற்றவர்களாக இருப்பதை அறியமுடிகின்றது. இதற்கான காரணத்தை நோக்கும் போது அதிகளவான மாணவர்கள் வறுமை நிலை காரணமாக தினமும் பாடசாலைக்கு சமூகமளிப்பதில் ஆர்வமற்றவர்களாக காணப்படுகின்றனர். இதனால் பாடசாலை சென்று கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஆர்வம் இன்மையை அறிய முடிகின்றது. எனினும் இப்பாடசாலையில் இந்த பிரச்சினையை எதிர்கொள்ளக்கூடியவர்கள் அண்ணளவாக ஒரு வகுப்பில் 3% மான மாணவர்களைக் கொண்டு காணப்படுகின்றார்கள் (நேர்காணல்-05). இதனால் பல்வேறுபட்ட கல்விசார்ந்த பிரச்சினைகளுக்கு ஆளாகின்றார்கள். இதற்கு காரணமாக பிள்ளைகளின் பெற்றோர்கள் காணப்படுகின்றனர். ஏனெனில் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில் ஆர்வமற்றவர்களாக

இருந்தால் அது பற்றிய விழிப்புணர்வை வழங்குவது கிடையாது. இதனால் மாணவர்கள் அவர்களது கல்விச் செயற்பாடுகளில் பாரிய பின்னடைவை சந்திக்கின்றனர்.

**5.2.4. கல்வியில் பின்னடைவு**

இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியினான பின்னடைவினைப் பொறுத்தமட்டில் வறுமைக் குடும்பப் பின்னணி அதிகம் செல்வாக்குச் செலுத்துவதை குறிப்பிடலாம். இதனால் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் தடைப்பட்டு அவர்களது கல்வியில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இவ்வாரான நிலை படிப்படியாக வளர்ச்சியடைந்து எதிர்கால சமூகத்திற்கு சவாலாக அமைய வழிவகுக்கின்றது. கல்வியில் பின்னடைந்த சமூகம் உருவாவதற்கு காரணியாக அமைகின்றது. இவ்வாரான பின்னடைவானது எதிர்காலத்தில் மாணவர்களுக்கு பாடசாலை இடைவிலகலையும் தொழிலின் மீதான ஆர்வத்தையும் தூண்டுகின்றது.

**5.2.5. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெற்றோர் கவனம் செலுத்தாமை**

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் பெற்றோர்கள் கவனம் செலத்தாமை என்பதும் மாணவர்களது கல்விச் செயற்பாடுகளில் பெரிதும் தாக்கம் செலுத்துவதை ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதன்படி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களில் ஆறு மாணவர்களின் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வி சார்ந்த விடயங்களில் ஆர்வம் காட்டுவது குறைவு என்பதாக மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் சில பெற்றோர்கள் வெளிநாடு செல்வதினால் மாணவர்களினது கற்றலில் குறிப்பிடத்தக்களவு தாக்கம் செலுத்துவதனை அறிய முடிகிறது. ஆய்வுக்குள்வாங்கிய 40 மாணவர்களில் 06 மாணவர்கள் இப்படியான கல்விசார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இதற்கான காரணம் அவர்களது வறுமை நிலையாக இருக்கின்றது. இன்னும் பெற்றோர்களது பராமரிப்பில் இருந்து அவர்களுக்கு விதிவிளக்காக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அவர்களது கல்விச் செயற்பாடுகளுக்கு எந்தவித பொறுப்புக்களும் இன்றி அவர்கள் விரும்பியது போன்று செயற்படுகின்றனர். இதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் இப்படியான மாணவர்களது பெற்றோர்கள் நீண்ட காலமாக வெளிநாடுகளில் பணிபுரிவதாகும். இதனால் இவர்கள் கவனிப்பாரற்று விடப்படுகின்றனர். இப்பாடசாலையில் இவ்வாறாக விடப்படக்கூடியவர்களில் வகுப்பில் சராசரியாக 5% ஆனவர்கள் இருப்பதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றது.

இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில்: உளவியல் ரீதியான பிரச்சினைகள், ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள், பண்பாட்டு, ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் போன்றன முக்கியமாக காணப்படுகிறது (முஹையிதின், 2017).

வினாக்கொத்து தரவுகளின் அடிப்படையில் நோக்கும் போது குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் வறுமை நிலை காரணமாக தினமும் பாடசாலைக்கு சமூகமளிப்பதில் ஆர்வமற்றவர்களாக காணப்படுகின்றனர். ஆகவே இவ்வாறான நிலையில் மாணவர்கள் இருக்கின்ற பட்சத்தில் புதிய வருட ஆரம்பத்தில் இவர்களுடைய பாடசாலை இணைப்பு வீதமானது சற்று தாமதமாகவே இருக்கின்றமையும் இன்னும் பாடசாலை சென்று கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஆர்வம் இன்மையையும் அறிய முடிகின்றது. வறுமையின் முக்கிய அடையாளங்களில் ஒன்று மகிழ்ச்சி குறைவடைதல். அதாவது ஒரு மாணவனின் கல்வி செயற்பாடானது சந்தோஷமாக அமைகின்ற பட்சத்தில் அவனது கல்வியின் மீதான ஆர்வம் அதிகரிக்கின்றது. அவனது சந்தோஷமான நிலை குறைகின்ற பட்சத்தில் அதில் உள்ள ஆர்வம் அவனை விட்டும் தூரமாவதையும் காணமுடிகின்றது (அப்துல் ரஊப், 2022).

**5.2.6. மேலதிக வகுப்புக்களுக்கு செல்ல முடியாமை**

பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் தங்களது மேலதிக அறிவுக்காக வேண்டி விசேடமான வகுப்புக்களுக்கு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதனடிப்படையில் கிண்ணியாவிலும் மேலதிக வகுப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதை தற்காலத்தில் கண்டுகொள்ள முடிகின்றது. மேலதிக வகுப்புகளுக்கு செல்வது என்பது மாணவர்களுக்கு அவசியமான ஒரு விடயமாக கருதப்படுகின்ற அளவுக்கு முதன்மை வகிக்கின்றது. இதன் காரணமாக பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை பாடசாலை கல்வியோடு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் மேலதிக வகுப்புகளுக்கு அவர்களை அனுப்புவதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். இருப்பினும் கல்வியினான நாட்டமின்மையால் மேலதிக வகுப்புக்களுக்கு செல்லுவதற்கு மாணவர்களது கரிசனை குறைவாக இருக்கின்றது. இது அவர்களது கல்வியில் பல சவால்களை ஏற்படுத்துகின்றது. அதுமாத்திரமின்றி இப்படியாக அவர்களை மேலதிக வகுப்புகளுக்கு அனுப்புகின்ற பொழுது மாணவர்களது பாடத்திற்கான செலவுகளும் மாணவனுடைய செலவுகளும் பெற்றோர்களுக்கு மேலதிக செலவாக காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் வறுமை நிலைக் கோட்டில் இருக்கின்ற மாணவர்கள் மேலதிக வகுப்புகளுக்கு செல்லாமை ஓர் சவாலாக அமைவதை கிண்ணியாவில் காணமுடியுமாக உள்ளது. இன்னும் மாணவர்களது கல்வியினான நாட்டமின்மையை சாதகமாக பயன்படுத்தி ஒரு சில பெற்றோர்கள் அவர்களை மேலதிக

வகுப்புகளுக்கு அனுப்புவதை விட்டு விடுகின்றனர். எனவே ஆய்வு மேற்கொள்ளப்பட்ட 40 மாணவர்களில் 16 (48%) மாணவர்கள் இவ்வாறான பிரச்சினைகளக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

**5.2.7. பாடசாலை இடைவிலகலும் தொழிலின் மீதான ஆர்வமும்**

இதுவும் கல்விசார் பிரச்சினைகளுக்கு மாணவர்களை இட்டுச்செல்கின்றது. தற்கால பொருளாதார நெருக்கடி நிலையாலும் குடும்ப வறுமைச் சூழலாலும் மாணவர்களுக்கு இப்படியான தாக்கம் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாக 15% மாணவர்கள் காணப்படுகின்றார்கள். காரணம் பெற்றோர்களது வீட்டு வருமானம் அந்த குடும்பத்துக்கு போதாமையாகும். இது பெரும்பாலும் குடும்பத்தில் மூத்த ஆண்மகன் எதிர்நோக்கும் பிரச்சினையாக உள்ளது. இன்னும் இவர்கள் தங்களது கல்விச் செயற்பாடுகளை இடையில் நிறுத்தியவர்களாகவும் இருக்கின்றனர்.

இவ்வாறான காரணிகளால் மாணவர்களது பாடசாலை வருகை விதமும் இடைவிலகலும் காணப்படுவதை பாடசாலை வரவு தரவின் மூலம் அறிய முடிகின்றது. அதிலும் குறிப்பாக இந்த இடை நிலைப்பிரிவு மாணவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். 2022இல் 16 மாணவர்கள் இப்பாடசாலையில் இருந்து இடைவிலகியதை அறிய முடிகிறது. அதற்கான காரணம் அவர்களுக்கு தொழில் மீதான ஆர்வமும் உழைப்பின் அவசியமுமாகும். எனவேதான் இப்படியான மாணவர்கள் கல்விசார் பிரச்சினைகளுக்கு அதிகம் முகங்கொடுக்ககூடியவர்களாக இருக்கின்றனர்.

## 6. முடிவுரை

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்கள் பல்வேறுபட்ட கல்விசார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அப்படியான பிரச்சினைகளில் வறுமையினால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியானது மிக முக்கியமான கல்விப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலையின் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கங்களை அடையாளம் காண்பதில் வறுமையானது பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றது. 71% மான மாணவர்கள் இப்படியான பிரச்சினைகளால் பெரிதும் அசௌகரியங்களை கொண்டிருக்கின்றனர். எனவே, வறுமை நிலையால் இடைநிலைப் பிரிவு மாணவர்கள் பல கல்விப் பிரச்சினைகளை சந்திக்கின்றனர் என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகின்றது. இந்தப் பிரதேசத்தில் இன்னும் குறிப்பாக இந்தப் பாடசாலையில் இதுபோன்ற ஆய்வு இதற்கு முன்னர் மேற்கொள்ளப்படவில்லை என்றும் எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வு செய்வதற்கு இவ்வாய்வானது பெரிதும் துணை புரிவதாகவும் அமையும்.

## 7. பரிந்துரைகள்

- கல்வியினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வினை முன்வைத்து மாணவர்கள் மத்தியில் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ஆய்வுப் பிரதேசத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்தல்.
- தாய்-தந்தைகளை இழந்த மாணவர்களுக்கான துரித நிவாரண வசதிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) மூலம் பெற்றுக் கொள்ள வழி ஏற்படுத்த வேண்டும்.
- கல்விப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கையை இடைநிறுத்தினால் அதற்கான உரிய பரிந்துரைகளை வழங்குதல்.
- பாடசாலை செல்வதில் மாணவர்களுக்கு தடையாக இருக்கும் செயற்பாடுகளை உரிய தரப்பினரிடம் அணுகி அதற்கான முடிவுகளை எடுத்துக் கொடுத்தல்.
- ஒவ்வொரு பாடசாலையிலும் தனியான ''கல்வி அபிவிருத்தி நிலையம்'' நிறுவப்பட்டு அதன் மூலம் நிகழ்ச்சிகளை நடாத்துதல். இன்னும் மாணவர்களது செயற்பாடுகளின் விழிப்புணர்வு, வழிகாட்டுதல், ஆலோசனை, பயிற்சிகள், சிறப்புத் திட்டங்கள் மற்றும் மாணவர்கள்இ பெற்றோர்களுக்கான நிதியுதவி வழங்குதல்.
- பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகுவதனைக் குறைப்பதற்கு அல்லது முற்றாக நீக்குவதற்கு அரச நிறுவனங்களும், யுனிசெப் போன்ற உள்ளூர், சர்வதேச தொண்டு நிறுவனங்களும் பல்வேறு திட்டங்களினை நடைமுறைப்படுத்தல்.
- கட்டாயக் கல்விச் சட்டம், போசாக்கு உணவுத் திட்டங்கள், இலவச சீருடை, இலவச பாடநூல் விநியோகம் என்பன போன்ற திட்டங்களில் கடின தன்மையை செயற்படுத்தல்.

**உசாத்துணைகள் (REFERENCES)**

Abdul Halik, A.F., & Rafeena, H.M. (2021). *குறைந்த கல்வி செயல்திறன் மற்றும் குறைபாடுகள்: கிண்ணியா கல்வி வலயம்.* 9th International Symposium-2021, [Conference session] FAC, SEUSL. Retrieved: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/5501.

Abdul Rauf, A.L. (2022). இலங்கை: வறுமை அதிகரிப்பதால் உணவு கிடைக்காத குழந்தைகள் ஊட்டச்சத்து குறைந்த தலைமுறை உருவாகிறதா?. Retrieved: https://www.bbc.com/tamil/sri-lanka-62617408#.

Ahamed Lebbe, S.M., & Fazeela, M.F. (2013). *வறுமையும்இ சமூக தாக்கங்களும் தொடர்பான ஒரு பகுப்பாய்வு.* 2nd International Symposium-2014, [Conference session] FMC, SEUSL. Retrieved:https://www.seu.ac.lk/researchandpublications/airc/2013/14%20Pages%20111-120%20Proceeding%202014.03.14%20(Final%20Version)-14.pdf .

British Broadcasting Corporation. (2022). *இலங்கை வறுமை அதிகரிப்பின் விளைவுகள்.* Srilanka. Retrieved: https://www.bbc.com/tamil/sri-lanka-62617408#:~:text.

Department of Statistics, (2022) *வறுமை நிலைப்பற்றிய ஆய்வறிக்கை தகவல்.* இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம். இலங்கை. Retrieved: https://www.cbsl.gov.lk/ta/%E0%AE%AA%E0%A.

Department of Samurdhi Development, (2022). Payment of salary increment and granting grace period. Retrieved: https://www.samurdhi.gov.lk/web/index.php/home/172-latest-circular.html.

Divisional Secretariat. (2022). *Statistical Information by Population Kinniya*. Planning Division. Divisional Secretariat Kinniya, Trincomalee. Sri Lanka.

Education Department of Sri Lanka, (1980). Education in Sri Lanka. History, Literacy, Achievements And Issues. Retrieved: https://factsanddetails.com/south-asia/Srilanka/Education_Health_Transportation_Infrastructure_Srilanka/entry-8022.html.

Examination Marks Sheets, (2022). *Second Term Examination.* T/Kin Al-Aqsa National School.

International Committee of the Red Cross. (2022). இலங்கையின் நலிவடைந்த மக்கள் வறுமை பாதைக்குள் தள்ளப்படும் ஆபத்து. Retrieved: https://www.virakesari.lk/article/137662.

Maheswaran, P. (2019). *மாணவர்களைப் பாதிக்கும் பொருளாதார, சமுகப் பிரச்சிகைகள்.* Vaaramanjari Article. Retrieved: http://www.vaaramanjari.lk/2019/02/17.

Mansoor, S.M. (2013). *கல்வியில் வறுமை ஏற்படுத்தும் தாக்கம்.* Import mirror blog post. Retrieved: http://www.importmirror.com/2013/01/blog-post_2363.html.

Ministry of Education & Higher Education Isurupaya – Srilanka. (2020). சுற்றுநிருப இல: 34/2020. Retrieved: https://moe.gov.lk/wp-content/uploads/2020/08/34-2020-Tamil-Circular.pdf.

Mohideen, H.L.M. & Thalib, I.M. (2017). *பெற்றோரை இழந்த சிறார்கள் எதிர்கொள்ளும் கல்வி தொடர்பான பிரச்சினைகள்.* 7th International Symposium-2017, [Conference session] FIA, SEUSL.Retrieved:https://www.seu.ac.lk/researchandpublications/symposium/7th/Inaternational%20Symposium%202017%20-%20SEUSL%20(62).pdf .

Provincial Planning Secretariat, (2022). *Statistical Information Eastern Province.* Published by: Eastern Provincial Council (2nd ed.). Sri Lanka. (Pages:105-154).

Report Handed Over to the Finance Minister by the Currency Board, (2021). *Annual Year Report*. Central Bank of Sri Lanka. Retrieved: https://www.cbsl.gov.lk/.

Robyn Alders and Osman Dar, (2020). *Global Hunger Index.* One Decade to Zero Hunger. Retrieved: https://www.globalhungerindex.org/pdf/en/2020.pdf.

Sanooja Puveneswaren, (2020). *கல்வியில் தற்கால பிரச்சினைகள்.* Department of Education and Child Welfare. Eastern University. Sri Lanka. Retrieved: http://www.battinews.com/2020/02/blog-post_305.html.

Santhresekaren, S,. (1992). Tamil Achievers. Retrieved: https://www.neotamil.com/person-of-the-week/subrahmanyan-chandrasekhar-limit-astrophysicist-nobel-prize-winner-life-history/.

T/Kin Al-Aqsa National School, (2022). *Students Details of Lost Both Parents and Single Parents.* Provincial Department of Education. Eastern Province. Sri Lanka.

UNICEF, (2022). *Student Academic Status in Sri Lanka.* Country Study, Colombo: UNICEF. Retrieved:https://www.unicef.org/media/130716/file/Sri-Lanka-SitRep-(Economic-Crisis)No.2-30-October-2022..pdf.

**நேர்காணல்கள் (Interviewers)**

1. A.M.M. Saleem, Personal Communication, (December 12, 2022). அதிபர், தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலை.
2. I. Mujeeb, Personal Communication, (December 18, 2022). கிண்ணியா பிரதேச செயலக துணைத் திட்டமிடல் அதிகாரி.
3. M.T.M. Siththiq, மாணவர் வழிகாட்டல் ஆசிரியர், M. Aareeff, M. Imthiyas மற்றும் A.R.M. Nawfal, Personal Communication, (December 11, 2022). தி/கிண்-அல் அக்ஸா தேசிய பாடசாலை.
4. M.M. Munas, K.M. Sathath மற்றும் J.M. Mazeen Personal Communication, (December 10, 2022). மாணவர்களது பெற்றோர்கள்.